**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

நாள் 16.06.2026

அசல் வழக்கு எண்.154/2009

வா.சா.1 – ஜானகிராமன் த/பெ. வாஜதேவன் என்பவரை 4, 5-ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் வழக்குரையில் எனது தாத்தா ராகவபிள்ளை என்பவர் 28.05.2003 தேதியில் இறந்ததாக சொல்லியுள்ளது சம்மந்தமாக அவரது இறப்பு சான்றிதழ் இவ்வழக்கில் ஆவணமான தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவரது ஈமகாரியம் பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் இதற்கு முன்பு குறுக்கு விசாரணையின் போது எனது தாத்தா ராகவபிள்ளை கைரேகை வைப்பார் என்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.1 உயில் ஆவணத்தில் ராகவபிள்ளை கைரேகை வைத்துள்ளார் என்று சொன்னால் மேற்படி ஆவணம் எனது தாத்தா எழுதிய உயில் ஆவணமல்ல. எனது தாத்தா இறக்கும் போது எனக்கு என்ன வயது என்றால் எனது தாத்தா 2003ல் இறந்தார். அப்போது எனக்கு 34 வயதாகும். தற்போது எனது வயது என்ன என்றால் 47 ஆகும். சாட்சி தற்போது தனது தாத்தா இறந்த போது தனது வயது 23 என்று சொல்கிறார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 4ம் பிரதிவாதி அன்புசெல்வம் மற்றும் 5ம் பிரதிவாதி செல்வேந்திரன் இருவருக்கும் ராஜகோபால் பொதுஅதிகார முகவராக திருமதி.விஜயலட்சுமி என்பவர் கிரயம் கொடுத்துள்ள ஆவணம் என்றால் சரிதான். மேற்படி பொதுஅதிகார முகவர் விஜயலட்சுமியை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது தாத்தா ராகவபிள்ளை 24.05.2003 தேதியில் எழுதிவைத்த உயில்படியாக

சொத்தினை 4 மற்றும் 5ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது தாத்தா எழுதிவைத்த உயிலில் எனது தந்தையை வாரிசாக குறிப்பிடவில்லை என்று சொன்னால் அந்த உயில் ஆவணம் சரியானது அல்ல. உயில் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ள நபர்களை நாங்கள் சாட்சிகளாக விசாரணை செய்யவில்லை என்றால் அவர்கள் தற்போது உயிருடன் இல்லை. மேற்படி உயில் சாட்சிகள் இறந்துவிட்டார்கள் என்பதை நிரூபிக்கும் வகையில் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் எனது முதல் குறுக்கு விசாரணையில் எனது தந்தை வாசுதேவன் திருமணம் ஆனவுடன் எனது தாத்தாவை பிரிந்து சென்னையில் குடியேறிவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது தந்தைக்கு திருமணம் ஆன பிறகு இடம் வசதி இல்லை என்பதால் அதே ஊரில் வேறு வீட்டில் எனது தந்தையை எனது தாத்தா குடியமர்த்தினார்.

2. நான் தற்போது வேளச்சேரியில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். எனது தந்தையும் நானும் எப்போது வேளச்சேரிக்கு சென்றோம் என்றால் எனது தந்தை இறந்து பின்னர் தான் நான் வேளச்சேரிக்கு சென்றேன். எனது தந்தை எங்கு வசித்து வந்த போது காலமானார் என்றால் சென்னை டி-நகரில் உள்ள வீட்டில் நாங்கள் குடியிருந்த போது காலமானார். எனது தந்தை காலமான போது எனது தாத்தா வீட்டில் இருந்தார். எனது தாத்தா ராகவபிள்ளை மற்றும் பாட்டி அலமேலு இருவரையும் நாங்கள் சென்னையில் இருந்த போதும் ஊரில் இருந்த போதும் பராமரித்து வரவில்லை என்றால் சரியல்ல. எனது சித்தப்பா ராஜகோபால் தான் எனது தாத்தாவை பராமரித்து அவருக்கு இறுதி சடங்குகள் செய்தார் என்று சொன்னால் சரியல்ல.

3. எனது தாத்தா அவரது மூத்த மகன் ராஜகோபால் என்பவருக்கு 24.05.2003 தேதியிட்ட உயில் ஆவணம்படியாக தாவா சொத்தினை எழுதிக்கொடுத்துள்ளார் என்றும் எனது தாத்தா இறந்த பின்னர் மேற்படி உயில் அமலுக்கு வந்து அதன்படியாக ராஜகோபால் விஜயலட்சுமிக்கு பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்து அதனடிப்படையில் விஜயலட்சுமி 4, 5ம் பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தினை கிரயம் கொடுத்துள்ளது சட்டப்படி செல்லத்தக்கது என்று சொன்னால் சரியல்ல, எனது தாத்தா உயில் ஆவணம் எழுதிக்கொடுக்கவில்லை. எனது தாவாவில் உயில் ஆவணம் குறித்து விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் இல்லை, அதைப்பற்றி எனது சாட்சியத்தில் சொல்லியுள்ளேன். 4, 5 பிரதிவாதிகளை இவ்வழக்கில் தவறாக தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 4, 5 பிரதிவாதிகளுக்கு எதிராக இவ்வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பியுள்ளேன். அதில் உயில் ஆவணம் பற்றி சொல்லியுள்ளேனா என்றால் இல்லை, அப்போது உயில் ஆவணம் ஒன்று இல்லை என்பதால் அதைப்பற்றி சொல்லவில்லை. வா.சா.ஆ.10 - 17.08.2007 தேதியிட்ட எனது வழக்கறிஞர் அறிவிப்பில் முகவரியானது வேளச்சேரியில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அறிவிப்பில் 4-ல் 1 பாகம் கோரி தான் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.10-ல் 4வது பாராவில் என்ன விவரம் சொல்லப்பட்டுள்ளது என்றால் 24.05.2003 தேதியிட்ட உயிலின் அடிப்படையில் மறைந்த ராகவபிள்ளை விட்டுச்சென்ற சில சொத்துக்களை மற்றவர்களின் ஒப்புதல் பெறாமல் விற்றுவிட்டதாக தெரிகிறது என்றும் எனது கட்சிக்காரர்கள் ஆட்சேபணைக்குரிய அந்த

உயிலின் நம்பகத்தன்மை, தகுதி, உண்மை தன்மை, சாட்சியம் ஆகியவற்றை ஆட்சேபிக்கிறார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. மேற்படி அறிவிப்பில் எனது தாத்தாவிற்கு எந்தெந்த ஊரில் சொத்துக்கள் உள்ளது என்ற விவரம் பற்றி சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். எனது தாத்தா இறக்கும் போது எனக்கு வயது 23 என்றும் அதனால் எனது தாத்தா உயில் பற்றி அப்போதே எனக்கு தெரிந்துள்ளது என்றும் அதைப்பற்றி அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ளது என்றும் அதனால் வழக்கிற்காக உண்மைகளை மறைத்து உயில் ஆவணம் பற்றி தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தாத்தா இறக்கும் வரை ராஜகோபால் தான் அவரை பராமரித்து வந்தார் என்றும் அதனால் எனது தாத்தா தாவா சொத்துக்களை ராஜகோபாலுக்கு உயில் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும் அதன்படியாக ராஜகோபால் பொதுஅதிகார முகவர் மூலமான 4, 5 பிரதிவாதிகளுக்கு கிரயம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல, உயில் ஆவணம் பொய்யானது ஆகும். இவ்வழக்கில் சொத்தின் மதிப்பினை குறைவாக குறிப்பிட்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் உரிய காலக்கெடுவிற்குள் வழக்கை தாக்கல் செய்யவில்லை என்பதால் இந்த வழக்கு காலாவதி தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் அறிவிப்பில் உயில் பற்றி சொல்லிவிட்டு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும் போது தான் உயில் ஆவணத்தை பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. 4, 5 பிரதிவாதிகள்

**குறித்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.** 4, 5 **பிரதிவாதிகள் இவ்வழக்கில் அவசியமின்றி சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல.**

Type written by the Gr-II Bench Clerk in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Additional Subordinate Judge,
Kancheepuram,